வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 4379/ஆ4/2025 நாள்: 23.02.2026

பொருள் : தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –மார்ச் – 2026, மேல்நிலை முதலாமாண்டு (Arrear) / இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகள் மாற்றுத்திறன் கொண்ட பள்ளி மாணவர்களுக்கு தேர்வு நேர சலுகைகள் வழங்கி ஆணை பெறப்பட்டமை –பள்ளிகளுக்கு –தெரிவித்தல் – சார்பு.

பார்வை : 1.அரசாணை (நிலை) எண்.62, பள்ளிக் கல்வி (அ.தே) துறை, நாள் 25.03.2022
2.வேலூர் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரின் கடிதம் .003051 /13/2025, நாள். 12.02.2026.
3.அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 016029 /எச்1/2025 நாள் 21.02.2026
4. வேலூர் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரின் கடிதம் .003051 /13/2025, நாள். 12.02.2026.

===============

பார்வை 3–ல் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க நடைபெறவிருக்கும் மார்ச்–2026, மேல்நிலை இரண்டாம் ஆண்டு / மேல்நிலை முதலாம் ஆண்டு (Arrear) பொதுத்தேர்வு சம்பந்தமாக மாற்றுத்திறன் கொண்ட பள்ளி மாணவர்களுக்கு தேர்வின் போது சலுகைகள் வழங்கும் பொருட்டு, பார்வை 1–ல் உள்ள அரசாணையினைப் பின்பற்றி தேர்வர்களுக்குள்ள உடற்குறைபாட்டின் அடிப்படையில் சொல்வதை எழுதுபவர், கூடுதல் ஒரு மணி நேரம் தேர்வெழுத அனுமதி, மொழிப்பாட விலக்கு போன்ற சலுகைகள் வழங்க மாற்றுத் திறனாளித் தேர்வர்களின் தேர்வு நேர சலுகைகள் விண்ணப்பங்களை ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இணைப்பில் காணும் பட்டியலில் உள்ள தேர்வர்களுக்கு மார்ச்– 2026, மேல்நிலை இரண்டாம் ஆண்டு / மேல்நிலை முதலாம் ஆண்டு (Arrear) பொதுத் தேர்வினை எழுத அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் பரிந்துரைத்துள்ளபடியான சலுகைகள் வழங்கி பார்வை 3 –ல் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநரின் பெறப்பட்ட பட்டியல் இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது.

மேலும் பார்வை 4–ல் காணும் வேலூர், மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரின் தகவலின் படி மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு சலுகைகள் கோரும் மாற்றுத்திறன் கொண்ட பள்ளி மாணவர்களின் பட்டியல் (spell –2) இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது.

இணைப்பு:

1. +2 spell –1 & 2
2. +1 Arrear

//ஓம். //
முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்:

சார்ந்த மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்,வே.மா.

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை/ தனியார் பள்ளிகள்) அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுபிவைக்கப்படுகிறது.
- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(/தொடக்கக்கல்வி) அவர்களுக்கு தகவலின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.